மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மைதானம், ஜன நெருக்கடி மிகுந்த இடம் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். கூவம் ஆற்றிற்கு அருகாமையில் பரந்த வெளியில் சிறுவர்கள் காற்றாடி விட்டுக்கொண்டிருந்தபொழுது காற்றாடி அறந்துபோன காரணத்தினால் பிடிப்பதற்கு ஓடி மூன்று பேர்கள் ஆற்றில் விழுந்து இறந்துவிட்டார்கள். அதேமாதிரி தான் இன்னொரு இடத்தில் காற்றாடி விடுகிற நேரத்தில் ஒரு குழந்தை கழுத்தில் காற்றாடி கயிறு சிக்கிக்கொள்ள, கயிற்றை இழுப்பதற்கு காற்றாடி விட்ட இருவரும் முயற்சி செய்ததால், குழந்தையின் கழுத்தில் காற்றாடிக் கயிறு இறுகி, குழந்தை இறந்து விட்டது. ஆகவே ஜன நெருக்கடி உள்ள இடம், ஜன நெருக்கடி இல்லாத இடம் என்பதில்லை. காவலர்கள் காற்றாடி பறக்க விடுவதை தடை செய்யும் முயற்சியில் பொது மக்களும், மற்றவர்களும் ஒத்துழைப்பு தந்தால் நலமாக இருக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : காற்றாடி பறக்கவிடும் சிறுவர்கள் எத்தனை பேர்களை போலீஸார்கள் பிடித்தார்கள் ? அவர்கள் மீது ஏதாவது வழக்கு போடப்பட்டதா ? அதன் விவரத்தை முதல் அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1971-ல் இப்படி 60 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

Arrest of Eve teasers

* 180 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Eve teasers in the City of Madras have been traced and arrested by the Police during their rounds in the months of August and September 1971 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 1971-ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் திங்களில், 53 பேர் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டனர்.

திரு. ஆ. பரந்தாமன் : ஆண்களை ஆண்களே கேலி செய்கின்ற ராகிங் என்ற முறை கல்லூரிகளில் நிலவி வருகிறது. இதைத் தடுக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கேள்விக்கும் அதற்கும் தொடர்பு இல்லை. ஆங்காங்கு இருக்கிற கல்லூரி முதல்வர்கள் அதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பொதுவாக பெண்கள் நம்முடைய பண்பாட்டிற்கு ஏற்ற முறையிலே உடை அணியாத காரணத்தினால் இப்படிப்பட்ட ராகிங், டீஸிங் என்ற முறைகள் நிலவி வருகின்றன என்பதை குறிப்பாக நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சில பேர்கள் தொப்புள் தெரிய சேலை கட்டுகிறார்கள். சில பேர்கள் டைட்ஸ் போடுகிறார்கள். இன்னும் சில பேர்கள் லோ ஹிப்ஸ் என்ற முறையில் சேலை கட்டு கிறார்கள். இதைப் பார்க்கின்ற சாதாரண மாணவர்களுக்கு ப்ராவகேஷன் வருகிறது. (சிரிப்பு) ஆகையினால் குற்றம் அவர்கள் பேரில் கிடையாது. இவைகளில், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மிக்க ஆர்வம் உள்ளவர்கள்—இவைகளைக் களைந்து எறி வதில்! (சிரிப்பு) ஆகவே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலாகிலும் உடைகளைப்பற்றி ஏதாவது ஒரு நல்ல முறை அனுசரிக்கப்பட வேண்டும் என்பதற்கு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கைடு லைன்ஸ் ஏற்பாடு செய்து, அதற்கான உத்தரவு பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் கூட்டி இதைப்பற்றி யோசிக்கலாம்! (சிரிப்பு)

தமிழ்நாட்டு வரலாறு.

*181 **வினா—திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு கல்வி—உள் ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டு வரலாற்றை எழுத ஒரு குழு நியமிக்கப் பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அந்தக் குழுவின் உறுப்பினர்கள் யாவர் ?